# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*



## திடீர் விபத்தில் தாங்கிடும் அவரது 'மென்மையான இரக்கம்!'

பாதுகாப்பாய் வாழ 'ஏற்ற சமயத்தில்' உதவிடும் அவரது மென்மையான இரக்கமே (Tender Mercies) நமது தேவை! (சங்.119:77). இயேசுவைப் பற்றிய நமது தினசரி தியான வாழ்க்கையில், கிருபாசனத்தண்டை கிட்டிச் சேர்ந்தவர்களுக்கு 'பொதுவான தேவ இரக்கம்' மாத்திரமல்ல..... இந்த 'மென்மையான இரக்கத்தை' தேவன் நாள்தோறும் தந்தருளுவார்! இந்த மென்மையான இரக்கத்தை, கிருபை என்றே புதிய ஏற்பாடு போற்றி அழைக்கிறது! (எபிரெயர்.4:15,16). இந்த உலகம் பாராட்டும் சம்பத்துக்கள் யாதொன்றும் ஐஸ்வர்யம் அல்ல.... தெய்வ ஸ்நேகத்தில் ஒருவன் கண்டடையும் 'இந்த கிருபையே' மெய்யான ஐஸ்வர்யம்!!

இந்த மென்மையான இரக்கமே, சாலை விபத்தில் நம் கால் 'சறுக்கும்போது....' தாங்கிடவும், சோதனை வேளையில் நாம் பாவம் செய்து விடுவோமோ.... என்ற இக்கட்டில், நம்மை 'வழுவாமல்' காத்திடவும் வல்லது! ஆம், இந்த கிருபை மாத்திரமே எல்லா வற்றிற்கும் போதுமானது!!

*-tr*

பெட்டகம் 22 ஏப்ரல் 2020 பரல்கள் 4



## 'நம் உயிர்போன்று இருக்கும் அன்பே' நிலைத்திருக்கும்!

'அன்பே பிரதானமானது' என நாம் அறிந்திருக்கிறோம். தேவனை அன்புகூருவதும், பிறரை அன்புகூருவதும் ஆகிய இந்த அற்புத செயல் நம்மில் ஒருவருக்கும் தூரமானது அல்ல. அது ஏனென்றால், நம்மில் எல்லோருக்கும் இருதயம் உள்ளது! இருதயம் இல்லாமல் ஒருவரும் வாழ இயலாது. அதுபோலவே அன்பில்லாத இருதயமும் பிழைத்திருக்க இயலாது!!

'உயிரைப் போன்று உள்ள அன்பை' நான் ஏன் நாடி வாஞ்சிக்க வேண்டும்? என ஒருவன் கேட்பது தகுதியான கேள்வி அல்ல. யாதொரு கேள்வியும் கேட்காமலே, பிறரிடம் அன்புகூர நாம் பழகுவோமாக. மெய்யான அன்பிற்கு முன்பாக 'காரணங்கள்' நிலை நிற்பதில்லை. நான் ஏன் அன்பு கூர வேண்டும்? என்ற முட்டுக்கட்டை போடும் காரணங்கள் விலகி விட்டால், தேவ அன்பு நம்மை நிறைத்துவிடும்! இவ்வாறு மிக எளிய விதத்தில் அன்புகூர முயற்சித்துப் பாருங்கள். அப்பொழுது, ஒரு 'தத்துவ ஞானி' கூட அடைந்திட முடியாத மேன்மையை நீங்கள் அடைந்திடுவீர்கள். தூர்ந்து போன மனுஷீக அன்பின் துரவுகளில் பானம் செய்வதை விட்டுவிட்டு, ஜீவ நதி புரண்டோடும் திவ்விய ஊற்றண்டை தாகம் தீர்க்க வாருங்கள்! இந்த ஜீவ ஊற்றை கண்டடைந்தவன், அதை விட்டுவிட்டு மாய அன்பிற்கு ஒருபோதும் செல்லமாட்டான்.

*-Ed*


'பரலோக பொக்கிஷங்கள்' வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## உங்கள் சீர்கெட்ட வாழ்வு, சீராகிட முடியும்!

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித் தார்! (ஆதி.1:1). அது, பல கோடி கோடி ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்றிருக்கலாம்! அது எத்தனை பல கோடி என நமக்குத் தெரியாது!! தேவனுடைய வாயிலிருந்து பிறந்த வார்த்தையினால் வானமும், பூமியும் சிருஷ்டிக்கப்பட்டபோது **அவைகள் பூரணமாய் சிருஷ்டிக்கப்பட்டிருந்தன** (எபி.11:3). ஏனென்றால், தேவன் சிருஷ்டிக்கும் எந்த படைப்பும் பூரணமற்றதாய் இருப்பதில்லை! அப்படியானால், பூமியானது எப்படி வெறுமையாய், இருளாய், ஒழுங்கின்மையாய் மாறியது? (1:2). தேவன் ஒருபோதும் ஒன்றை வெறுமையாயும், இருளாயும், ஒழுங்கின்மையாயும் சிருஷ்டிப்ப தில்லையே!? பூமியானது இப்படி ஆகியதற்கு காரணம், வசனம் ஒன்றிற்கும் இரண்டிற்கும் இடையில் 'ஏதோ ஒன்று' நடை பெற்றுள்ளது! அவ்வளவுதான்.

விழுந்துபோன தேவதூதனாகிய லூசிபர் 'பிசாசாய்' மாறினான். இந்த பிரபஞ்சத்தில் பாவம் முதன்முதலாக பிரவேசித்ததும் அப்போதுதான்! வேதாகமம், தேவதூதர் களுக்காக அல்லாமல் மனுஷருக்காக எழுதப்பட்டபடியால், ஆதியாகமத்தில் லூசிபரின் வீழ்ச்சி குறிப்பிடப்படவில்லை. எனவேதான் **மனிதனின் சிருஷ்டிப்பு** வேதாகமத்தில் முதல் அதிகாரத்திலும், **லூசிபரின் வீழ்ச்சியோ** வெகு பிற்பாடு (ஏசாயா 14 மற்றும் எசேக்கியேல் 28 ஆகிய பகுதிகளில்) எழுதப்பட்டுள்ளது!

சீரழிக்கப்பட்ட, கெட்டுப்போன, இருளான, மற்றும் வெறுமையான இந்த பூமி "**மறு ஆக்கம்**" செய்யப்படுவதைதான் ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் மீதமுள்ள பகுதியில் நாம் வாசிக்கிறோம்.

> இந்த அதிகாரத்தின் முடிவிற்கு நீங்கள் வரும் போது, இந்த பூமி மறுபடியும் அழகானதாகிவிட்டது! எனவே, தேவன் தாமே அதைப் பார்த்து "இது மிகவும் நல்லது" என்று சொல்ல முடிந்தது!!

ஆதியாகமம் 1-ம் அதிகாரம் நம் எல்லோருக்கும் ஒரு செய்தியைக் கொண்டுள்ளது. சாத்தான் மனிதவர்க்கத்துக்குள் புகுந்து, 2-ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடியே..... மனித வாழ்க்

*கையை வெறுமையாகவும், இருளாகவும், ஒழுங்கின்மையாகவும் மாற்றிவிட்டான்! நாம் தேவ சாயலை தொலைத்து விட்டோம்! தேவனோ, ஆதாமை அப்படி ஒழுங்கின்மையில் சிருஷ்டிக்கவில்லை. ஆதாம் 'பூரணமாக' சிருஷ்டிக்கப்பட்டவன். ஆனால், பிசாசு 'உள்ளே வந்து' மனிதனை கெடுத்துவிட்டான். எனவேதான்,* **தேவன் மனிதனை ஆதிநிலைக்கு** *கொண்டுவர வேண்டியதாயிருந்தது.*

*சீரழிந்த மானிடத்தை மறுபடியும் சீராக உருவாக்குவதே இன்றும் தேவனுடைய வேலையாயிருக்கிறது. நீங்கள் எவ்வளவு ஒழுங்கீனமும், இருளும், வெறுமையுமாய் இருந்தாலும் சரி, அது ஒரு பொருட்டல்ல. முழு உலகத்தையும் பாதித்துள்ள* **'கொரோனா' சீரழிவையும்,** *அவர் ஒருவரே மாற்ற வல்லவர்!* **தேவன் உங்களை மறுபடியும் சீராக்க முடியும்** *என்றே முதல் அதிகாரம் சொல்லுகிறது. தேவன் தாமே உங்களைப் பார்த்து மிகவும் நல்லது என சான்று பகரும்படி, நீங்கள் அவருடைய சாயலை மீண்டும் பூரணமாய் பிரதிபலிக்கும் அளவிற்கு, தேவன் உங்களை மிகவும் நேர்த்தியாய் சீரமைக்க முடியும்! இதுவே வேதாகமத்தின் முதல் அதிகாரம் நமக்குக் கூறும் சத்தியம்! சுபிட்சமான செய்தி!!*

*ஆனால் இந்த மாற்றம் எப்படி நடந்தது என்பதை நீங்கள் புரிந்து கொண்டால் மாத்திரமே, உங்கள் வாழ்க்கையிலும் அதே மாற்றம் நடைபெற முடியும்!*

*'நல்ல மாற்றத்தைக்' கொண்டு வருவதற்கே, ஒவ்வொரு நாளும் தேவன் தம்முடைய வார்த்தையைப் பேசினார். முதல் நாள் ஒன்றைப் பேசினார்! இரண்டாம் நாள் ஒன்றைப் பேசினார், ஒவ்வொரு நாளும் பேசினார்! நம்முடைய தேவன் பேசுகின்ற ஜீவனுள்ள தேவன்!! இதைத் தான், நாம் வேதாகமத்தின் முதல் அதிகாரத்தில் காண வேண்டும்.*

> **நீங்கள் மறுரூபமாக்கப்பட வேண்டுமென்றால், தேவன் உங்களோடு பேசுவதை நீங்கள் அனுதினமும் கேட்க வேண்டும் என்பதே முக்கிய தேவையாகும்.**

*"மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" (மத்.4:4) என்ற நியதியில்* **'மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும்'** *என்றே தேவன் திட்டம் வைத்திருந்தார். எனவே, நாம் அவருடைய சத்தத்தை தினமும் செவிகொடுக்காதபட்சத்தில், நாம் மறுரூபமடைவதும் முடியாது!*

*காரியம் இவ்வாறாக இருப்பதால், தேவனுக்கு செவிகொடுக்கும் பழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். தேவனோ தினமும் பேசுகிறார்! திரளான இன்றைய விசுவாசிகள் அவருக்கு செவி*

*கொடுப்பதில்லை.* **தினமும் வேதம் வாசிப்பவர்கள் கூட, அவர் சத்தத்திற்கு செவி சாய்ப்பதில்லை!** *தேவனுக்கு செவிகொடுத்தல்.... வேதம் வாசிப்பது போன்றதல்ல! தேவன் உங்கள் இதயத்திற்கு என்ன சொல்ல வருகிறார்? என்பதை கவனிக்காமலே, வேதத்தை ஒரு கதைப் புத்தகம் போன்றோ அல்லது ஒரு வேதியல் புத்தகம் போன்றோ நீங்கள் படித்து வழி தவற முடியும்!*

*அடுத்ததாக நாம் இங்கே பார்க்கும் ஒரு காரியம் என்ன வென்றால், தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடினார் என்பதுதான்! (ஆதி.1:2). தேவன் பேசுவதைக் கேட்ட பிறகு,* **ஆவியானவர் உங்கள் மேல் அசைவாடிட நீங்கள் அனுமதிக்க வேண்டும்.** *அப்போதுதான், நீங்கள் மறுரூபமடைய முடியும்! ஆதியிலிருந்தே, 'பரிசுத்தஆவியானவர் தேவ வார்த்தையோடு ஒருங்கிணைந்து' வேலை செய்வதை நாம் காண முடிகிறது. தேவ வார்த்தையும், பரிசுத்த ஆவியானவரும் சேர்ந்து செயல்பட்டதினாலேயே, ஒழுங்கற்ற இந்த பூமிக்கு மாற்றமும் அழகும் உண்டானது!*

*கிறிஸ்தவ உலகத்தின் இன்றைய மிகப்பெரும் தேவை,* **சமநிலை** *ஆகும். கர்த்தருடைய வார்த்தையை கிரமமாய் படிப்பதைக் குறித்து வலியுறுத்தும் அநேக விசுவாசிகள், அதற்குச் சமமாக 'ஆவியானவரை' சார்ந்திருப்பதைக் குறித்து வலியுறுத்துவதில்லை.* **ஆவியானவரின் ஒத்தாசை** *இல்லாததினால், நீங்கள் எலும்பைப் போன்று உலர்ந்த வர்களாகவும், கிட்டத்தட்ட மரித்தவர்களாயும் இருக்கிறீர்கள்!* **தேவனுடைய வார்த்தையை அசட்டை பண்ணி,** *பரிசுத்த ஆவியின் ஊழியத்தை வலியுறுத்துபவர்கள்* **உணர்ச்சிவசம்** *என்ற பக்க வழியை அடைந்து, அதையே ஆவியின் கிரியைகள் என்று தவறாக எடுத்துக் கொள்கிறார்கள்: தடம் புரண்ட ரயில் வண்டி, சகதியில் புதையுண்டு, சீற்றத்தோடு விசிலடித்தும்! அதிகமாய் சத்தம் போட்டும்! எவ்வளவேனும் முன்னோக்கிச் செல்ல முடியாதது போல, இவர்களும் தேவ வசனத்தை விட்டு விலகி, எவ்வளவுதான் 'அந்நிய பாஷையில்' சத்தம் போட்டாலும், வாழ்க்கையிலே எவ்வித முன்னேற்றமும் இருப்பதில்லை. ஏனென்றால், ஆவியின் பரவசம் கண்ட அவர்கள், தேவனுடைய வார்த்தை தங்களை வழி நடத்த அனுமதிப்பதில்லை!*

*எனவே, வேதப்புத்தகத்தின் முதல் அத்தியாயத்திலேயே, நாம் பூரணமடையும்படிக்கு சீர்திருத்தலையும், நீதியைப்படிப்பிக்கு தலையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றே காண்கிறோம்! 'ஆதியாகமம்' ஆரம்பத்தை உற்றுப்பார்த்து, நாம் சீரடையும் வழியை அறிந்து, மாற்றம் அடைவோமாக!* *– சகரியா பூணன்*

## ‘ஒரு துளி நீர், சமுத்திரத்தில் கலந்த’ ஐக்கியம் பெற்றேன்!

*தன்னால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தீமைகளையும் வெறுப்பையும் காண்பித்த என்னுடைய மாமியாரின் இருதயத்தில் ஓர் திடீர்மாற்றம் நிகழ்ந்தது. நானோ, எப்போதும்போல், அவர்களின் ஒவ்வொரு தீமையான செயலுக்கும் நன்மை செய்து, என்னால் முடிந்த அனைத்தையும் வைத்து அவர்களைப் பிரியப்படுத்த நாடி வந்தேன். இந்த நிலையில், திடீரென்று ஏற்பட்ட ஓர் அதிசயமான மன மாற்றத்தில், என்னுடைய மாமியார், தன்னிடத்தில் வந்த எல்லோரிடமும் “நான் எவ்வளவு மோசமாய் நடந்திருந்தாலும் என் மனதிற்கு எந்த வேதனையும் தராமல், என்னை அன்பு செலுத்தி மனதார ஏற்றுக்கொண்ட என் மருமகள் குயானைப்போல் வேறு ஒருவரையும் நான் கண்டதில்லை” என கூறத்தொடங்கினார்கள்! என்னை, ஒரு துடைத்துப் போடும் அழுக்கைப்போல் குறிப்பிட்டு, வெறுப்பின் கூக்குரலை என்னைச் சுற்றிச்சுற்றி வந்து காண்பித்த என் மாமியார், இப்போதோ “ஒவ்வொரு நிகழ்ச்சியாய் குறிப்பிட்டு, என்னைப் புகழ்ந்து” மெச்சிக் கொள்ளத் தொடங்கினார்கள். இது என் கண்களுக்கு மிகுந்த ஆச்சரியமாயிருந்தது. எனக்குரிய கௌரவத்தை எவ்வளவு தரைமட்டும் சீரழித்தார்களோ, அதற்கு இணையாகவும்.... அதற்கு மேலாகவும் என்னுடைய சீரழிந்த கௌரவத்தை, என் மாமியார் மூலம் தேவன் வெகு சிறப்பாய் அலங்கரித்ததைப்போல் நான் கண்டேன்.*

**என் மாமியார் என்னிடத்தில் சீற்றம் கொண்டிருந்த முந்தைய சம்பவங்கள் அனைத்திலும் என் உள்ளத்தில் தெய்வ சமாதானத்தை அப்பியாசப்படுத்தி பெற்றிருந்தேன். இப்போது ‘பேரிரைச்சலை’ தேவன் அமர்த்திய பிறகும், வழக்கம்போலவே என் இருதயத்தில் ‘அதே சமாதானம்’ என்னை ஆட்கொண்டிருந்தது!**

*இவ்வாறு, உள்ளும் புறமும் பூரண சமாதானத்தை தேவன் எனக்காக செயல்படுத்தியதைப் போல் தோன்றியது. இது எனக்கு ‘புதிய எருசலேம் பிரவேசிக்கும்’ அனுபவத்திற்கு ஒப்பாயிருந்தது. அங்கு, தன் மணவாளனுக்கு ஆயத்தம் செய்யப்பட்ட மணவாட்டி யாதொரு கண்ணீரும் கவலையும் இல்லாத தேவனுடைய நகரத்திற்குள் பிரவேசித்ததற்கு ஒப்பாயிருந்தது! இந்நிலையில், என் முழு சுய- சித்தமும் இழந்து, தேவனுடைய உன்னதமான அவரது சித்தத்திற்குள் நான் ‘ஒருமைப்பட்டதை’ அனுபவித்து உணர்ந்தேன். இது தேவன் எனக்கு பகிர்ந்தளித்த விருந்து சாலையைப் போலவே*

*நான் கண்டேன்! ‘சுய சித்தத்திற்கு மறுப்பு சொல்லும்’ போராட்டம் ஓய்ந்து, தேவனோடு முழு சுயாதீனம் பெற்ற இயற்கையான அனுபவத்தைப் போலவும் உணர்ந்தேன்!*

*இவ்வித இனிய நிலையில் நான் தொடர்ந்து பூரண மகிழ்ச்சியாயிருந்தேன்! நான் கண்டடைந்த இந்த ஜீவன், அதிக வல்லமை பெற்று, இந்நேரம் வரை நிறைவுடன் வளர்ந்து வருகிறது. இந்த ஆசீர்வதிக்கப் பட்ட நிலையில் ‘இதையோ’ அல்லது ‘அதையோ’ என்னால் விருப்பம் கொள்ள முடியவில்லை. அதாவது,* **“எதுதான் எனக்கு நடந்தாலும்” நான் மாறாத திருப்தி கொண்டவளாயிருந்தேன்.** *என் வீட்டில் இருக்கும் யாராகிலும் என்னிடம் வந்து “இது உங்களுக்கு வேண்டுமா? அல்லது அது உங்களுக்கு வேண்டுமா?” என்று கேட்டால், இதற்கு விடை எனக்குள் எதுவும் இல்லாதிருக்கிறபடியால், எது என்னுடைய விருப்பம்? அல்லது எதை நான் எடுத்துக்கொள்ள வேண்டும்? என நான் எப்படி கண்டுபிடித்திட முடியும்? என்றே ஆச்சரியப்படுகிறேன்! நான் இப்போது நின்று வாழும் நிலை என்னவென்றால்* **‘ஒரு மிகப்பெரும் வல்லமை’** *என்னை ஆட்கொண்டு ஏராளமான சிறிய விஷயங்களை வாரி மறையச் செய்து விட்டது! அத்தனை இடத்தையும் இந்த மிகப்பெரும் உன்னத வல்லமை முற்றிலும் நிறைத்துவிட்டது. நான் இன்னமும் உணர்ந்தது என்னவென்றால், என் ஆத்துமாவை முன்பு நடத்தி வந்த* **அவரது கோலும் அவரது தடியும்** *இப்போது இருப்பதைப் போல் காணாமல்,* **கோலும் தடியும் உடைய நல்ல மேய்ப்பனை** *மாத்திரமே எனக்கு முன்பாக காண்கிறேன்! என் ஆத்துமா தன் முழு இடத்தையும் அவருக்கே கொடுத்துவிட்டது!*

*மெய்யாகவே நான் உணர்ந்தது என்னவெனில் என் முழுமையும், என்னை விட்டு கடந்து தேவனிடத்தில் சரணாகதி அடைந்ததையும்! என்னை அவரோடு ஒன்றாக்கிக் கொண்டதையும் உணர்ந்தேன்!*

**அது எப்படியெனில் “ஒரு துளி நீர், சமுத்திரத்தில் போடப்பட்டால், அந்த சமுத்திரத்தின் முழு குணாதிசயத்தையும் ‘அந்த ஒரு துளி நீர் பெற்று விட்ட நிலைக்கு’ என்னை உணர்ந்தேன்!”.**

*“ஓ, ஐக்கியத்தின் ஒருமைப்பாடாய் இருப்பவரே* (ருடேைடிைடை டிக ருடேை–வல)! *அதை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனுஷர்களுக்கு அளித்திட வந்தவரே! நீர் விரும்புவது போலவே* **தேவனுக்குள் தன்னை முற்றிலும் இழந்து போகும் ஆத்துமா** *எத்தனை வலிமை கொண்டதாயிருக்கும்! இப்படியொரு திவ்யமான ஐக்கிய உறவில், கவரப்பட்ட எந்த ஆத்துமாவும், தேவனோடு கிறிஸ்துவுக்குள் மறைந்துவிட்டதாய் மாறுகிறது!” என, என் உள்ளம் பேரானந்தத்தில் மகிழ்ந்தது!*

*என் ஆத்துமா அவரிடம் ஐக்கியம் கொண்டது எனக் கூறுவதை விட, என் ஆத்துமாவை அவர் தன்னோடு உள்ளடக்கி கொண்டார்! எனக்கூறுவதே என் மகிழ்ச்சியின் உண்மையான ஆதாரமாய் இருக்கிறது. என் தனிப்பட்ட அனுபவ பூர்வமாய் "அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும்....* **நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல,** *அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்" என்ற இயேசுவின் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஜெபம் (யோவான்.17:21) என்னில் நிறைவேறியது! ஆமென்.*

*– மேடம் குயான்*

---

## 'பல நிறங்கள் கொண்ட' ஒரே மலர் கொத்து அவரது சபை!

*இது 'தேவனுடைய கரத்தின் கிரியை' என்ற அவரின் முத்திரையை நாம் காண வேண்டுமென்றால், அது ஒரே அளவைப் போல் இல்லாமல், பல தினுசுகளாய் இருப்பதைக் காண்பீர்கள்!*

*இதை பவுல் கூறும்போது, "ஒரு நட்சத்திரம், மற்றொரு நட்சத்திரத்தின் மகிமைக்கு வித்தியாசமாயிருக்கிறது" எனக் கூறினார். மேலிருந்து கீழே இந்த உலகத்தை நோக்கினால் மாசுபடிந்த புகை மண்டலம், இவ்வுலகத்தை 'ஒரே விதமாய்' படர்ந்திருப்பதைக் காணலாம்! ஆனால் நம் தலை உயர்த்தி, வானத்தைப் பார்த்தால் தேவனுடைய நகரமாகிய நட்சத்திர மண்டலத்தில், ஒரு நட்சத்திரம் கூட மற்றொரு நட்சத்திரத்திற்கு சமமாய் காண முடிவதில்லை. அதன் ஒரு மகிமை மற்றொரு மகிமைக்கு வித்தியாசமாயிருக்கிறது! அது ஏனென்றால் "தேவன் அவைகளை சிருஷ்டித்தார்" என்ற இரகசியமே யாகும்!*

*அதற்கு மாறாக,* **ஆகாய மண்டலத்து நட்சத்திரங்கள்** *அனைத்தையும், ஒரே அளவில் அடுக்கி வைக்கப்பட்ட ஒரே வரிசையில், ஒரே பிரகாசத்தில் சிருஷ்டித்திருப்பாரென்றால்.... மகா அற்புதமும் மனதை கொள்ளைக்கொள்ளும் 'தேவனுடைய வான விரிவை' காண்பதற்கு பதிலாக "ஒரு கலையரங்கத்தில் அழகுபட வைத்த விளக்குகளைக் கண்டு நாம் மகிழ்ந்ததைப்போல்" மாத்திரமே இருக்கும். ஆகாய விரிவின் பரவசம் நம் உள்ளத்தில் தென்படாமல் போய்விடும்!*

*இந்த பூமியிலுள்ள* **எந்த மரத்தையாகிலும்** *தேடிப் பாருங்கள். ஒரு மரத்திலுள்ள இரண்டு இலைகள் கூட மற்ற இலைகளுக்கு ஒப்பாயில்லை என்ற உண்மையை ஐந்து நிமிடத்திற்குள் கண்டுபிடித்து விடுவீர்கள். அவைகள் அனைத்துமே ஒன்றுக்கொன்று வித்தியாசமா யிருக்கிறது. ஒரேவிதமாய் இருப்பதைப்போல் தோன்றலாம். 'தாவர*

*இயல்படி'* அந்த மரத்தின் இலைகள்தான் எனவும் அறிந்து கொள்ளலாம். ஆனால், ஒவ்வொரு இலையும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருக்கிறது.

**ஏனெனில், தோற்றத்திற்கு ஒன்றாயிருப்பதைப் போல் தோன்றினாலும், "அவருடைய சிருஷ்டிப்புகள் வித்தியாசமாயிருப்பதற்குரிய சுதந்திரத்தை" தேவன் அனுமதித்துள்ளார்!**

சமுத்திரத்தின் கரையிலிருந்துப் பாருங்கள். **புரண்டு வரும் அலைகள்** ஒன்று உயரமாகவும் ஒன்று தாழ்வாகவும் வெவ்வேறு உந்து திசையில் பாய்ந்து வருவதைக் காணலாம். அந்த உயிரோட்டத்தை ஒரு ஓவியனாலும் பிரித்து காட்ட முடியாமல் 'ஒரே விதமாய்' வரைந்து விடுவான். அதுபோலவே, பறவையின் பாடலைக் கேட்பவர்கள் இது குயிலின் சத்தம்! இது மைனாவின் சத்தம்! இது ராபின் குருவியின் சத்தம்! எனக் கூறினாலும், இரண்டு ராபின் குருவிகளின் சத்தம் ஒன்றாயிருப்பதில்லை! இரண்டு குருவியின் சத்தமும் ஒன்றாயிருப்ப தில்லை!

இப்போது, வேதத்திலுள்ள வெவ்வேறு பரிசுத்தவான்களை சீர்தூக்கிப் பார்க்கும்போது சில குணாதிசயங்களை ஒப்பிட்டு எல்லா பரிசுத்தவான்களும் அதே நிலையில் இருப்பார்கள் என நாம் கருதுகிறோம். ஆனால் வேதம் குறிப்பிடும் ஒவ்வொரு பரிசுத்தவான் களிடத்திலும் விதவிதமான குணாதிசயங்கள் ஆழமாய் பளிச்சிடு கின்றன! இரண்டு வித்தியாசமான தேவ மனிதர்களை உங்கள் மனதில் ஒப்பிட்டுப் பாருங்கள். அவர்கள் இருவரும் ஒரே சபையில் அமர்ந் திருந்தால், இருவரையும் சமமாய் கருதுவது உங்களால் முடியாது என்பதை அறிவீர்கள். **ஆனால் உண்மையில் அவர்கள் இருவரும் ஒரே விசுவாசத்தை சார்ந்தவர்கள்! தேவனை மையமாய் கொண்ட அவர்களின் ஒற்றுமை, 'அவர்களுக்கு உள்ளே' வாசமாயிருக்கிறது.** வெளிப்புறமாக, அவர்கள் நிச்சயம் வேறுபட்டவர்கள்தான். ஆனால், தங்கள் 'இருதய பூர்வமாய்' இசைந்திருக்கிறார்கள்!

பேதுருவை தலைமையாக கொண்ட சீஷர்களின் குழுவைப் பாருங்கள். அதில், பிலிப்பு வேறுபட்டவர்! யோவான் வேறுபட்டவர்! எலியாவுக்கும் பேதுருவுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் தெளிவாய் காண்பது போல, ஒரே குழுவிலுள்ள இவர்களும் வேறுபாடு கொண்டவர்கள். இவ்வாறு பல்வேறு தினுசுகளில் இவர்களின் குணாதிசயங்கள் இருந்தாலும், அவர்கள் கொண்டிருந்த தெய்வ தன்மை 'ஒரே ஒற்றுமையில்' இருந்தது! அதுஏனென்றால் அந்த ஒற்றுமை "அவர்களுக்குள்" வாசமாயிருந்தது!

**தேவன் தாமே, தம்முடைய சபையை இந்த உலகத்திற்குத் தந்தருளியுள்ளார். அந்த சபையிலுள்ள ஒவ்வொருவரும் உள்ளான ஜீவியத்தில் உறுதியான ஒற்றுமை கொண்டவர்கள்! ஆனால் அதே சமயத்தில், அவர் அளித்துள்ள சபையில், ஓர் அழகுள்ள பூந்தோட்டத்தைப்போல் விதவிதமான ரகங்களையும் வைத்திருக்கிறார்!**

*எனக்கு மிகவும் பிடித்தமான* **'கொலீட்'** *என்ற தேவ மனிதன் இருந்தார். அவர் கர்த்தருடைய வார்த்தையை தெளிவாய் பிரசங்கிப் பார்! அவர் ஒரு கருப்பு நீக்ரோ சகோதரர்! அவர் ஒருமுறை பிரசங்கித்த நல்ல வார்த்தைகள் என் மனதைத் தொட்டது: "தேவன் தன்னுடைய பூங்கொத்தில் அவர் சிருஷ்டித்த சகல நிறங்களையும் இணைத்து வைத்துள்ளார்! அந்த பூங்கொத்து அனைத்தும் உங்கள் நிறமாகவே இருந்தால், விதவிதமான ரகம் கொண்டதாய் அந்த பூங்கொத்து ஜொலிக்காது! அவ்வித விதவிதமான ஜொலிப்பை கொடுப்பதற் காகவே 'என்னையும்' (கருப்பர்) தேவன் உங்கள் நடுவில் வைத்திருக் கிறார்!" எனக்கூறி, எல்லோரையும் பக்திவிருத்தி அடையச் செய்தார்.*

*அவர் கூறிய வார்த்தைகள் அப்பழுக்கில்லாத வார்த்தைகள். தனக்கே சொந்தமான வெவ்வேறு தினுசுகளை, ஒவ்வொரு எல்லா சபைகளிலும் தேவன் வைத்திருக்கிறார். தோற்றத்திலும் குணாதிசயத் திலும் மட்டுமல்ல, வரங்களிலும், ஊழியங்களிலும் வெவ்வேறு தினுசுகளை வைத்திருக்கிறார்! எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், பேதுரு நம்மை உற்சாகப்படுத்துவது என்னவென்றால் "எல்லோரும் ஏக சிந்தையும்! ஐக்கியமும்! கொண்டவர்களாய் இருந்திட அழைக்கிறார்" பேதுரு இங்கே கூற வரும் செய்தி என்ன?* **அவரவர் வைத்திருக்கும் "திவ்ய குணாதிசயத்தில்" ஏக சிந்தையுடையவர்களாய் இருக்கவே நம்மை அழைக்கிறார்.** *இவ்வாறாகவே தேவ ஆவியானவர் நம் எல்லோருக் குள்ளும் கிறிஸ்துவின் சுபாவங்களை நிஜமாய் பெற்றுக்கொள்ள செய்கிறார். உதாரணமாய் கிறிஸ்துவின் சுபாவங்களில் ஒன்றான* **'மன உருக்கத்தை'** *எண்ணிப் பாருங்கள். இங்கு பேதுரு கூற விரும்புவ தெல்லாம் "கிறிஸ்துவைப் போலவே மனதுருக்க முள்ளவர்களாய்! அவரைப் போலவே அன்புள்ளவர்களாய்! அவரைப் போலவே இரக்கமுள்ளவர்களாய்! அவரைப் போலவே கனம் செய்கிறவர்களாய்! அவரைப்போலவே மன்னிக்கிறவர்களாய்! என தொடர்ந்து, முடிவில் கடைசியாக "நீங்கள் யாவரும்* **ஏக சிந்தை யுள்ளவர்களாயிருங்கள்!"** *என ஒரே வாக்கியத்தில் தொகையிட்டார்.*

*இதுவே கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட ஒற்றுமையா யிருக்கிறது. நாம் வித்தியாசமானவர்களாயிருந்தாலும், இந்த*

*ஐக்கியத்தின் பாதையில் நடந்து வருவோமாக. இதுவே, தேவனுடைய பிள்ளைகளுக்கு,* **ஆசீர்வதிக்கப்பட்ட குடும்ப ஐக்கியமாயிருக்கிறது.** *இதுவே, கிறிஸ்துவை பின்பற்றும் சீடர்கள் வைத்திருக்க வேண்டிய 'ஒருமனம்' என பேதுரு கூறினார். இந்த "ஏக சிந்தையான மனதுருக்கம், ஒருவரையொருவர் அன்புகூருதல், ஒருவருக்கொருவர் மென்மையான இருதயம், ஒருவரையொருவர் கனம் பண்ணுதல், கிறிஸ்துவைப்போல் ஒருவரையொருவர் மன்னிக்க பிரயாசப்படும் குணாதிசயம்...." ஆகிய* **தெய்வ நற்குண ஒற்றுமையில்** *வாழ்வதற்கு ஒவ்வொரு வாஞ்சையுள்ள விசுவாசியும் பிரயாசப்பட வேண்டும். இதுபோன்ற சீடர்கள் உங்கள் சபையில் இருந்தால், "தேவன் விரும்பும் பல்வேறு நிறங்கள் கொண்ட மலர் கொத்தாய்" சபை ஜொலித்திடும்! ஆமென்.*

*– A.W. டோசர்*

---

## 'சுய ஞானம்' விசுவாசத்திற்கு எதிரி!

*இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தப்பினார்கள்! என்பது உண்மைதான். ஆனால், அதைத் தொடர்ந்த பயணத்தின்போது* **'தேவன் மீது வைத்த விசுவாசத்தில்'** *தளர்ந்து போனார்கள். பயணத்தில் 'சகித்து வாழ' முடியாதபடியால் "முறுமுறுப்பு" அவர்களை ஆட்கொண்டது. பயணத்தின் கடினம் அதிகரிக்க அதிகரிக்க.... ஒரு கட்டத்தில், கொள்ளிவாய் சர்ப்பங்களால் தீண்டப்பட்டு, அநேகர் மரிக்கும் நிலை ஏற்பட்டது!*

*பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தவறை உணர்ந்து 'தங்கள் முறுமுறுப்பை விட்டு' திருந்தினார்கள். கொள்ளிவாய் சர்ப்பத்திலிருந்து தங்களை தேவன் காக்கும்படி ஜெபிப்பதற்கு, மோசேயிடம் வேண்டிக் கொண்டார்கள். மோசே ஜெபித்தபோது "ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டுபண்ணி" அதை ஒரு கம்பத்தில் உயர்த்தி நிறுத்தும்படி தேவன் கட்டளையிட்டார். சர்ப்பத்தால் கடிக்கப்பட்ட யாராயிருந்தாலும், அவர்கள் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கும்படி அறிவித்தார். உடனே 'நோக்கிபார்த்த அவர்கள்' யாவரும் குணமடைந்தார்கள்!*

*இருப்பினும் சில ஜனங்களோ முறுமுறுக்கத் தொடங்கினார்கள். "விஷத்தை முறிக்கும் மருந்து தரப்பட்டால் அதை நாங்கள் நம்பலாம்! ஆனால், கொடிய கொள்ளிவாய் சர்ப்பம் எங்களை சீறி வந்து கடிக்கும்போது இந்த வெண்கல சர்ப்பம் எங்களுக்கு எவ்வாறு பலன் தர முடியும்?"* **என கேள்வி கேட்டனர்.** *இவ்வாறாக, அவர்களின் அவிசுவாசத்தில் 'கேள்வி ஞானத்தை வைத்து' வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்க்காமலே மரித்துப் போனார்கள்.*

இயேசு, இரட்சகராய் இந்த பூமிக்கு வந்த போது, நமக்காக **சிலுவையில் அறையப்பட்ட அவரை நோக்கிப் பார்த்தால் மாத்திரமே** மரணத்தைக் கொண்டு வரும் பாவ விஷத்திலிருந்து தப்பிக்கும் வழி நமக்கு அருளப்பட்டுள்ளது. தங்கள் இரட்சகராகிய எஜமானின் கிரியையை தங்கள் மனதில் ஏற்றுக்கொள்ள முடியாமல் 'அவரை நோக்கிப் பார்க்க மறுக்கும்' யாவரும் தங்கள் பாவ விஷத்தில் கெட்டுப் போகிறார்கள். மெய்யாகவே, அந்த விஷம் அவர்களின் சொந்த **அவிசுவாசத்தின் விஷமேயாகும்!**

**நாம் யாவரும் அறிந்திருக்க வேண்டிய உண்மை யாதெனில், நம்முடைய சொந்த புத்தியான தலை அல்ல.... இருதயமே, தேவனுடைய ஆலயமா யிருக்கிறது. நம்முடைய இருதயம் தேவனுடைய பிரசன்னத்தால் நிறைந் திருந்தால், நம்முடைய மனதும் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்!**

நம்மைச் சுற்றியுள்ள உலகம் 'காலை வெளிச்சத்தால் பிரகாசிக்கப் படாத பட்சத்தில்' நம்முடைய சரீர கண்களால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. அதுபோலவே, சத்தியத்தின் ஆவிக்குரிய வெளிச்சம் பிரகாசிக்கவில்லையென்றால், நம்முடைய மனதாலும் நம்முடைய கண்களாலும் எந்த பிரயோஜனமும் இல்லை. **ஆவிக்குரிய சத்தியத்தின் வெளிச்சத்திற்கு** நாம் அடங்கி இல்லாத பட்சத்தில், நம்முடைய 'சுய ஞானமும் சுய அறிவும்' மிக எளிதாய் தீமைக்கு திரும்பிவிட முடியும்!

அது எப்படியெனில், கிரேக்க ஞான சாஸ்திரிகள் நட்சத்திரத்தைப் பின்பற்றி பெத்லகேமிற்கு வந்தார்கள். ஆனால் பெத்லகேமிற்கு வந்து சேர்ந்ததும், இனி அவர்களுக்கு நட்சத்திரத்தின் உதவி தேவைப்பட வில்லை. அது ஏனென்றால் 'நீதியின் சூரியனாகிய' தங்கள் எஜமானை அவர்கள் கண்டடைந்து விட்டார்கள். உண்மைதான், சூரியன் உதித்தவுடன் நட்சத்திரங்கள் தங்கள் ஒளியை இழந்து விடுகிறது. இன்றும், நம் இந்திய தேசத்தில் சத்தியத்தை உண்மையாய் தேடும் அநேக மாந்தர்கள் உள்ளனர். ஆனால் உண்மையில், 'நட்சத்திர ஒளி மாத்திரமே' இன்னமும் அவர்களுக்கு இருக்கிறது. வேண்டுமானால், தங்கள் 'ஊனக்கண்களால்' கிழக்கே உதிக்கும் சூரியனைப் பார்த்து "சூரிய நமஸ்காரம்" செய்யலாம்! தங்கள் இரட்சகரை நோக்கிப் பார்த்து விசுவாசிக்கும் பாக்கியம் கிட்டுவதில்லை! ஏனென்றால் எஜமானாகிய **இயேசுவிடம் மாத்திரமே "சூரிய பிரகாசத்தின் மகிமை" இருக்கிறது!** இனியும், எஜமானை நோக்கிப் பார்க்கும் உத்தம விசுவாசத்திலிருந்து அடி பிறளாதிருக்க, நாம் யாவரும் ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்!

– சாது சுந்தர்சிங்

## பரம வாசஸ்தலத்தில் 'அவரது பிரசன்னமே' நமது முகவரி!

*உன்னதப்பாட்டில் தோன்றும் மணவாளி, தனிப்பட்ட விதத்தில் நம் ஒவ்வொருவருக்கும், முழு சபைக்கும் அடங்கும்! இந்த பூமியில் தான் மணவாளியின் அனுபவம், நித்திய மணவாளனுடன் நடை முறையில் சம்பவிக்க வேண்டும்! ஆகவே, இன்று அவருடைய மணவாளியாகிய நம்முடைய மிகப்பெரிய துயரம் என்னவென்றால் "அவர் இல்லாமல் தனித்திருக்க இயலாது.... என்னுடைய மண வாளனே திரும்பும்!" என அவர் இல்லாது தவிக்கும் கூக்குரலேயாகும்.*

**மணவாளனின் முகம் அவளை நோக்கி இருக்கும்போது "அவருடைய அன்பினால்" அவளுடைய முகம் சூரிய பிரகாசத்தைப்போல் களிகூர்ந் திருக்கிறாள்! ஆனால், அவருடைய முகப்பிரகாசம் அவளை விட்டு நீங்கும் போது, அவளோ மிகுந்த துயரமடைகிறாள்!**

*உங்களுக்கு தெரியுமா? நம்முடைய ஆண்டவர் சில சமயங்களில் தம்முடைய சொந்த ஜனத்திடம் 'தன் முகத்தை திருப்பி கொள்கிறார்!' ஆகிலும், தன் இருதயத்தை தன் ஜனத்தைவிட்டு ஒருபோதும் திருப்பிக் கொள்வதில்லை. சில சமயங்களில் நம் வாழ்க்கைப் படகு கொந்த ளிக்கும் நேரத்தில்கூட தம் ஜனத்தை பாராமல் 'தம் கண்களை மூடி' அயர்ந்திடவும் செய்வார் (மத்.8:23,24). ஆனால், அவருடைய இருதயமோ, தம் ஜனத்தினிமித்தம் எப்போதும் விழித்திருக்கிறது!*

*அதற்கு இணையாகவே, நாம் அவரை ஏதாவது ஒரு சிறிய அளவின்படியாகிலும் 'அவருடைய மனதை துக்கப்படுத்தியிருந்தால்' நாம் அவருடைய அன்பான இருதயத்தை துக்கப்படுத்தி விட்டோம் என்ற உணர்வு நம் உள்ளத்திற்கு எவ்வளவு துக்கத்தை கொண்டு வருகிறது! அவர் நம்மீது கொண்ட வைராக்கியத்தினிமித்தம் 'கொஞ்சம் முகத்தை திருப்பிக்கொண்டாலும்' அதற்கு நிச்சயமாய் காரணங்கள் இருக்கத்தான் செய்யும்! முதலாவது, நாம் அவரை எதிர்த்து நடந்த பிறகுதான், அவர் நமக்கு எதிர்த்து நடப்பார்! (லேவி.26:23,24).*

*இதுபோன்ற சூழ்நிலையே 'அதிக துக்கம் நிறைந்ததாகும்!'. நமக்கு* **'கர்த்தருடைய பிரசன்னமே'** *நம் பரம இராஜ்ஜிய ஜீவியத்திற்கு* **'முகவரியைப்போல்'** *இருக்கிறது. அவருடைய பிரசன்னம் நம்மை விட்டு விலகிவிட்டால், இந்த பூமியில் பரதேசியாய் வாழும் நம் ஜீவியத்திற்கு 'யாதொரு ஆறுதலும் இல்லை' என ஏங்கி தவிக்கிறோம்! தனிமையில் கொண்ட தினசரி தியானம், வேத வாக்கியம், சபையில் நாம் பெற்றுள்ள ஆராதனை ஆகிய அனைத்துமே 'சூரிய கடிகாரத்திற்கு முன்பாக' வந்து நிற்பதைப்போல் இருக்கிறது. அதில் நம் யாவருக்கும்*

*நிச்சயமாய் மிகுந்த மகிழ்ச்சி உண்டு. ஆனால் அந்த கடிகாரமுள்ளைத் தாண்டி நாம் வெளியே வரும்போது 'காரிருளான இந்த உலகத்திற்கு' அந்த வெளிச்சம் போதுமானதாய் இருப்பதில்லை.*

**என் உள்ளத்தில் நான் குமுறுவதெல்லாம் "ஓ என் ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய பிரசன்னம் இழந்திடும் நஷ்டத்தை, யாதொன்றை வைத்தும் ஈடு செய்திட என்னால் முடிவதில்லை... நீர் வாசம் செய்திடும் அன்புள்ள சபையாலும் முடிவதில்லை! ஏனென்றால், உம்முடைய சமூகம் இல்லாமல் இந்த மாய உலகத்தின் இரவு, ஒருபோதும் விடிவதில்லை!" என்றே நான் கண்ணீருடன் கெஞ்சுகிறேன்.**

*உண்மைதான் "கிறிஸ்துவின் நெருங்கிய ஐக்கியம்" நம்மைவிட்டு நீங்கும்போது, உத்தம இருதயம் கொண்ட எந்த பரிசுத்தவானும் அல்லது எந்த ஒரு பரிசுத்த சபையும், அவருடைய சமூகத்தை மீண்டும் பெறுவதற்கு, சொல்லிமுடியாத ஆசையில் தவித்திருக்கும்! அவருடைய சமூகம் திரும்ப கிடைக்கும் வரை 'அவருக்குப் பிரியமான மணவாட்டி' யாதொன்றை வைத்தும் திருப்தி அடைந்திட மாட்டாள்! ஏனெனில் 'பிரபு இம்மானுவேலோடு' அவள் கொண்டிருந்த ஐக்கியத்தின் உறவேயாகும்! ஏதோ ஒரு நிலையில், வேறு எங்காவது அவர் போய்விட்டாரோ? என, "அவர் திரும்ப வரும் வரை" உங்கள் இருதயம், வறட்சியினால் வாடி, அவர் வந்தவுடன் பேரானந்தம் கொள்ளும்!*

**இயேசுவின் நெருங்கிய சிநேகத்தை ருசித்து, பின்பு அதை இழந்த ஒவ்வொரு ஆத்துமாவும் "எனக்கு மீண்டுமாய் கிறிஸ்து வேண்டும்! இல்லாவிட்டால் நான் மரித்து விடுவேன்" என்றே கதறி அழும்!**

*அவரது பிரிய நேசத்திற்குரியவர்கள் 'அவ்வளவு எளிதில்' தங்கள் பரம சந்தோஷத்தை விட்டு விலக மறுத்து நிற்பார்கள்! அதுபோன்ற தேவ நேசர்கள் "அவர் திரும்ப வந்தாலும் வருவார்...." என்றெல்லாம் மிக இலகுவாக சிந்திக்க மாட்டார்கள். அதற்குப் பதிலாக "அவர் திரும்ப வந்தே தீர வேண்டும்! இல்லையென்றால், நான் பெலவீனப்பட்டு, மரித்துப்போய் விடுவேன்!" என்றே கூறுவார்கள். இதுபோன்ற தெய்வ நேசமே "அவர் திரும்ப வந்து நிச்சயமாய் ஆறுதல் செய்யும்" அடையாளமாயிருக்கிறது! அவருடைய வரவை "வாழ்வா? அல்லது சாவா?" என முன் வைத்தவர்களுக்கு மாத்திரமே, தாமதமின்றி விரைந்து வருவார்! இவர்களே, இயேசுவை ஆசையுடன் புசித்துப் பருகுவார்கள்! அப்படி இல்லையென்றால், அவர்களுடைய ஆவி பசியால் வாடி, தவித்துப் போகும். இந்த தெய்வ அன்பின் 'உத்தம சிநேகம்' சபைக்குள்ளும், நம் யாவருக்குள்ளும் ஓங்கி நிலைநிற்பதாக!*

*– C.H. ஸ்பர்ஜன்*

## மாயமற்ற விசுவாசமே, சபைக்கு ஆணிவேர்!

விசுவாசமில்லாதவர்கள், விசுவாசப் பிரமாணத்தை ஆயிரமுறை வாயினால் சொன்னாலும், அவர்கள் அவிசுவாசிகளே! மெய்விசுவாசம் கட்டாயம் நமது ஜீவியத்தை மாற்றும். தங்கள் குணத்தில், நடக்கையில் மாறுதல் இல்லாதவர்கள் விசுவாசிகள் அல்ல!

விசுவாசத்தைப் பார்க்கிலும் **அன்பு** பிரதானமானாலும், விசுவாச மில்லாமல் அன்பு மலராது! விசுவாசமில்லாமல் ஆவிக்குரிய மலர்ச்சி எதுவுமே ஏற்படாது! ஆகவேதான், ஆண்டவரும் அப்போஸ்தலரும் விசுவாசத்தை அவ்வளவு முக்கியமாய் பேசியிருக்கிறார்கள். **நமது இரட்சிப்பு விசுவாசத்திலே பிறந்து, விசுவாசத்திலே வளர்ந்து, விசுவாசத்திலே பூரணப்படுகிறது!** கிறிஸ்து மார்க்கம் நிலைத் திருக்கும் விசுவாச மார்க்கம்! வேத புஸ்தகம் ஓர் அற்புதமான விசுவாச புஸ்தகம். அப்போஸ்தலர்நடபடிகள் முழுவதும் விசுவாசமயமா யிருக்கிறது. விசுவாசித்தவர்களே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள்! ஏற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள்! **இவ்வாறு இரட்சிக்கப் பட்டவர்களே, சபையின் அங்கங்களானார்கள். இதுவே ஒழுங்கு!** இந்த விசுவாசத்தை 'மாயம் செய்பவர்களுக்கு' அங்கே இடமில்லை. இவர்கள், விசுவாசிகளோடு சேர்ந்து வாழ துணிகரம் கொண்டவர்கள்! 'மாயம் செய்திடும்' அவிசுவாசிகளுக்கும், உத்தம விசுவாசிகளுக்கு மிடையே ஆதி சபையில் பலத்த வித்தியாசமிருந்தது.

**இன்றைய சபைகளிலும் மாயம் செய்திடும் அவிசுவாசிகள், விசுவாசிகளோடு துணிகரமாய் கலந்திருக்கிறார்கள். இதுவே சபைகளில் நாம் காண்கிற சகல அக்கிரமங்களுக்கும் சங்கடங்களுக்கும் காரணம்!**

கிறிஸ்துவோடு கூடயிருந்து, அவர் போதனைகளைக் கேட்டு, அவர் செய்த அற்புதங்களைக் கண்ட அப்போஸ்தலரும் மற்றவர்களும், அவரை உத்தம இருதயத்தோடு விசுவாசிப்பது எளிது என்றும், நமக்கோ அது கஷ்டமென்றும் நினைக்கிறோம்! ஒரு விதத்தில் இது சரியே. ஆனால் அவரைக் கண்டவர்களானாலும் சரி, காணாதவர்க ளானாலும் சரி, எல்லாருக்கும் வகுக்கப்பட்ட ஒரே வழி, விசுவாச வழிதான்! அவரைக் கண்டவர்கள் விசுவாசிப்பதற்கு அவர் காரணமாயிருந்ததுபோலவே, அவரைக் கண்டவர்கள் விசுவாசிக்கக் கூடாதபடி **அவரது எளிய பிறப்பும், தரித்திர வாழ்க்கையும்,** அவர் சஞ்சரித்த பின் தங்கிய கலிலேயா நாடும் அவர்களின் அவிசுவாசத்திற்கு காரணமும், இடறலுமாயிருந்தன! விசுவாசம் ஏதோ எளிதான விஷயமல்ல! கிறிஸ்து அருமையானவர், அவர் மீது வைக்கும்

*விசுவாசமும் அருமையானது. அது "அதிக விலையேறப்பெற்றது" எனவும் வேதம் கூறுகிறது!*

*தம்மோடிருந்த சீஷர்கள் தம்மை விசுவாசிக்கும்படிக்கு ஆண்டவர் எவ்வளவோ பிரயாசப்பட்டார். இயேசு கிறிஸ்துவை வாக்கிலும் செய்கையிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசி என்று விசுவாசிப்பதல்ல. அவர் ஒப்பற்ற போதகரென்று ஒப்புக்கொள்வது மல்ல. இவைகள், அவர்கள் நிச்சயமாக அறிந்த விஷயங்கள்! ஆண்டவர் அவர்களிடம் எதிர்பார்த்த விசுவாசம் வேறே! தமக்கும் பிதாவுக்குமுள்ள தெய்வீக சம்பந்தத்தை அவர்கள் நம்பும்படி விரும்புகிறார். "நான் என் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீங்கள் விசுவாசிக்கிறதில்லையா? நான் என் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள், அது கஷ்டமாயிருந்தால், என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்" என்கிறார். கிறிஸ்துவைப்பற்றி எத்தனை காரியங்களை நாம் நம்பினாலும், அவரைப்பற்றி எவ்வளவு அறிவு நமக்கிருந்தாலும், "அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தெய்வம்" என்பதை நாம் நம்பி விசுவாசியாமற் போனால் நாம் அவருக்குச் சீஷர்களாயிருக்க முடியாது. அவ்வாறு விசுவாசிப்பது அவ்வளவு எளிதல்ல! அதிகாரிகளில் அநேகர் அவருக்கு எதிர்த்து நின்ற காரணம் அதுதான். "நீ மனுஷனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லுகிறாயே" என்றார்கள். ஆண்டவர் அதை மறுக்கவில்லை. ஏனெனில்....*

**கிறிஸ்துவின் தெய்வீகத்தை விசுவாசிப்பதற்கு ஆவியின் வெளிப்படுத்தல் அவசியம்.... "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை கர்த்தரென்று ஒருவனும் சொல்ல முடியாது". இந்த விசுவாசத்திலேயே திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. பேதுரு அவரது தெய்வீகத்தை அறிக்கை செய்தபோது: "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்றார்.**

*அப்போஸ்தலரும் ஆதிச்சபையாரும் இந்த விசுவாசத்திலே பிழைத்து உழைத்தார்கள். இந்த விசுவாசத்திற்காகத் தங்கள் உயிரையும் கொடுத்தார்கள்! பவுல் கிறிஸ்துவைத் தரிசித்தபோதிலும் 'கடந்து போன அந்தக் காட்சியை' நினைத்துக்கொண்டே பிழைத்தவரல்ல. தன்னை ஆட்கொண்ட தெய்வீக இரட்சகரை அனுதினமும் நம்பி பிழைத்தார், உழைத்தார், ஜெயித்து அவரிடம் சென்றார்! கிறிஸ்துவின் மீதுள்ள அந்த விசுவாசத்தைக் கடைசிவரை காத்துக் கொண்டார் (2தீமோ.4:7). அந்த "அசைவில்லா விசுவாசத்தை" போராடியாவது காத்துக்கொள்ள வேண்டும்! அந்த மாசில்லாத "விசுவாசத்தின் முத்திரை" நம்மிலும் நம் சபையிலும் நிலைத்திருக்க வேண்டும்!*

*– பரமானந்தம் ஐயர்*

## 'மன்னித்து மறக்கும்' கல்வாரி அன்பு!

*கிறிஸ்து என்னை மன்னித்ததைப்போலவே நானும் பிறரை மன்னிக்க வேண்டும்! என்ற வசனத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க என்னை முழுவதுமாய் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறேன். தனிப்பட்ட முறையில் எனக்கு விரோதம் செய்து, எனக்கு தீங்கு பேசி புறங்கூறிய எல்லோரையும் என் மனதார மன்னிக்கிறேன்.* **அவர்களைக் குறித்த பகை என் உள்ளத்தில் சிறிதுகூட இல்லை** *எனவும், எனது தைரிய சாட்சியை அறிவிக்கிறேன்!*

*ஆனால், என் ஆசிரமத்தில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளில், சிலரை நான் அவர்களுடைய தீய செயலுக்காக, முற்றிலும் மன்னித்து விட்ட போதிலும், அவர்களின் தீய செயல் என் கண்களுக்கு முன்பாகத் தோன்றி, என் உள்ளத்தை சஞ்சலப்படுத்தியதைக் கண்டேன். இவ்வித சுபாவம், கிறிஸ்துவின் ஆவிக்கு முரணான சுபாவம், என நான் அறிவேன்: "ஓ கர்த்தாவே, என்னையும் உம்முடைய சுபாவத்திற்கு ஒப்பாய்,* **மன்னித்தது மாத்திரமல்லாமல், அவைகளை நான் மறந்து விடவும்** *எனக்கு உதவி செய்தருளும்" என நான் ஜெபித்தேன்!*

*இவ்வித சஞ்சல நிலையில் நான் துவண்டபோது, "கடல் அலையின் சுத்திகரிப்பை" என் நினைவிற்கு கொண்டு வந்தார். உலகெங்கும் வியாபித்துள்ள கடற்கரைகளை 'கடல் அலை' இரண்டு முறை வீசி, சுத்தம் செய்வதை தேவன் காட்டினார். மேலோங்கி எழுந்து வந்து, கடற்கரையில் வீசி, கரையிலுள்ள அழுக்குகளை எல்லாம் கழுவி விட்டு, அந்த அழுக்குகளுடன் 'இரண்டாம் முறையாக' தன் அலைகளை கடல் நோக்கி பின்வாங்கிக் கொள்கிறது! இப்போது கடற்கரையிலிருந்த அழுக்குகள், கண்ணுக்குத் தெரிவதில்லை.*

**இவ்வாறாக கடல் அலைகள் கடற்கரையை கழுவி சுத்திகரித்த பின்பு, கடலுக்கு திரும்பிச் செல்லும் அலைகள் கழுவிய அழுக்குகள் இருந்த இடத்தையும் 'மறந்ததுபோல்' கடலுக்குள் மறைத்துக் கொள்கிறது!**

*இவ்வாறு தேவன் நியமனம் செய்த கடல் அலையின் சுத்திகரிப்பு செயல், ஒவ்வொரு நாளும் சம்பவித்துக்கொண்டிருக்க, நானோ "மன்னிக்கலாம், ஆனால் மறப்பது சிரமம்" எனக்கூறுவது சரிதானோ? என என்னை ஆராய்ந்து பார்த்தேன். இதுபோன்ற தெய்வீக வலிய செயல்,* **கல்வாரி அன்பினால் மாத்திரமே முடியும்** *என்பதை உணர்ந்து "இயேசு தேவா, உமது கல்வாரி அன்பை, என் நெஞ்சத்தில் நிறைவாய் தாரும்" என ஜெபித்து, என்னை அவர் பாதத்தில் சமர்ப்பித்தேன்!*

*– ஏமி கார்மைக்கேல்*

## பிரிவினை நடுச்சுவரா? அது, கொரோனா வைரஸ்!

"*பகையும், பிரிவினையும்" ஏதேனில் வாழ்ந்த ஆதாம் - ஏவாள் தொடங்கி, இந்த பூமியின் முதல் குடும்பத்திலிருந்த காயீன் - ஆபேல் சகோதரர்கள் தொடர்ந்து, ....இன்றுவரை பிசாசானவன் கிரியை செய்து வருகிறான்! வரப்போகிற புதியஉடன்படிக்கை ஊழியத்தின் ஓர் முக்கியமான சிறப்பாக "பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளுக்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடமும்"* **சேர்த்து வைக்கும் ஊழியமாக** *மல்கியா 4:6 (பழைய ஏற்பாட்டின் கடைசி வசனம்) பிரகாசிக்கிறது! ஆகவேதான் புதிய உடன்படிக்கையின் ஆண்டவர் இயேசு, 'பிரிவினையை - விவாகாரத்தை' முற்றிலுமாய் மறுத்து, அது அவர்களின் இருதயக் கடினம் என, எச்சரித்தார்! அது தேவனுடைய செயல் அல்ல எனவும் உறுதிபட கூறினார்! "பிரிந்து விட்டு, வேறொருவருடன் வாழும்" உணர்வை, தூய்மை இழந்த வேசித்தனம் எனவும் இயேசு பிரகடனம் செய்தார்!*

"**இயேசுவோடு இருப்பதும், அவரோடு சேர்ப்பதுமே**" *நம் ஜீவிய - ஊழிய பங்காய் இருக்க வேண்டும்! அப்படிச் சேர்க்காமல், சிதறடிக்கச் செய்பவன் "எனக்கு விரோதி!" எனவும் இயேசு அறிவித்தார் (லூக்.11:23). நம் பாவத்தை மாத்திரமே சிலுவையில் அறைந்திட இயேசு வராமல், நம்மிடமுள்ள 'விரோதத்தையும்' சிலுவையில் ஆணியடித்து வெற்றி சிறந்தார்! இவ்வாறாக, 'இரு திறத்தாரையும்' சிலுவையில் ஒன்றாக்கினார்! (கொலோ.2:14,15; எபே.2:14-16).*

**உலகை ஏறெடுத்துப் பாருங்கள்! 'பிரிவினை' பிசாசின் அகங்கார கொடிய செயல் என்பதை காண்பீர்கள். "ஒருவருக்கொருவர் தள்ளி நில்லுங்கள்.... கை கொடுக்காதீர்கள்.... சொந்த வீட்டில் இருப்போரையும் தனிமைப் படுத்துங்கள்" என பிரித்து வைத்திடும் பிசாசின் செயலை 'கொரோனா வைரஸின்' அகோரம் என கூறலாம்!**

*மருத்துவ ரீதியில் 'கொரோனா வராமல்' விழிப்புடனிருக்க கவனம் தேவைதான்! அதைவிட 'பிரிவினை-பகையோடு' வாழ்வது, நித்திய மரணத்திற்குரியது! சரீரத்தைக் கொல்ல வல்ல எந்த சத்துவத்திற்கும்* **அஞ்சாதீர்கள்!** *உங்கள் ஆத்துமாவை நித்திய அழிவிலிருந்து பாதுகாக்கும் கர்த்தருக்கே* **அஞ்சி வாழுங்கள்!** *இயேசு வாஞ்சையுடன் ஜெபித்த "பிதாவே, நீர் என்னிலும், நான் உம்மிலும்,* **இவர்கள் நம்மிலும் ஒன்றாயிருக்க வேண்டும்**" *என்ற 'அதிசயம்' நம் சபைகளில் ஓங்குவதாக! (யோ.17:21). எங்கள் சபையில் "பிரிவினை கொரோனா" இல்லை! என்ற இனிய கீதம் ஓங்கி ஒலிப்பதாக!*

*– T.ரத்தினகுமார்*

# கேத்தரின் (அலெக்சாண்ட்ரியா), வாலிபத்தில், சாட்சியாய் மரித்த தியாகப் பெண்!



(1897 - 1939)

புறதேசத்து வாலிப பெண்ணாகிய இவள், படிப்பில் சிறந்த அறிவாளியாய் இருந்தார்! அலெக்ஸாண்ட்ரியா பட்டணத்தின் பேரரசர் 'மேக்ஸ்மியன்' ஆட்சியில் கவர்னராயிருந்த கான்ஸ்டஸ் அவர்களின் மகள்தான் இந்த கேத்தரின். தன்னுடைய பாலக பருவத்திலிருந்தே கல்வியில் ஆர்வம் காட்டிய சிறந்த அறிவாளி. இயேசுவின் தாயாகிய மரியாளும், அவரிடம் அவதரித்த இரட்சகர் இயேசுவையும் மனதால் தியானித்து, இரட்சகர் இயேசுவின் உயர்ந்த தரிசனத்தை மனதில் பெற்று ஓர் சீரிய கிறிஸ்தவ பெண்ணாய் மாறினாள். தேசத்தில் அங்குமிங்குமாய் கிறிஸ்துவுக்கு சாட்சிகள் எழும்பியபோது, அவர்களை பேரரசர் உபத்திரவப் படுத்தினார். கவர்னரின் மகளாயிருந்த கேத்தரின் துணிவுடன் நேரடியாக பேரரசர் அவைக்குச் சென்று, அவருடைய உபத்திரவப்படுத்தும் கொடுமையை கண்டித்து எடுத்துரைத்தார். ஆத்திரமடைந்த பேரரசர், இளம் கேத்தரினை சவுக்கினால் அடித்து சிறையிலடைத்தான். பலமுறை சவுக்கினால் அடிப்பட்ட கவர்னர் மகள் கேத்தரின் உடல் முழுவதும் இரத்தம் கொட்டியதைக் கண்டு சுற்றி நின்ற மக்கள் அனைவரும் கண்ணீர் வடித்தார்கள். ஆனால் கேத்தரினோ, தன் சரீர வாதையைக் குறித்து ஒரு துளியும் அஞ்சாமல், தன் கண்களை வானத்தை நோக்கி பதித்திருந்தாள். உணவு எதுவும் தராமல் பசியால் மாண்டு போகும்படி சிறையில் அடைத்து தண்டனை வழங்கினார். சிறைச்சாலையில் அவள் பெற்ற கிறிஸ்துவின் ஐக்கியத்தில் "நித்திய மகிமையான கிரீடத்தை நீ பெறுவாய்" என்ற வாக்குதத்தத்தை அவரிட மிருந்து பெற்றாள்.

சிறைப்பட்ட கேத்தரினை சுமார் 200 ஜனங்கள் வந்து பார்த்தார்கள். அவ்வாறு பார்த்த ஜனங்களில் பேரரசரின் மனைவியும் வந்தார்கள். வந்த அனைவருமே கேத்தரின் கூறிய சுவிசேஷத்தைக் கேட்டு, கிறிஸ்துவுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். துயரம் யாதெனில் இவ்வாறு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்த 200பேரும் கொலை செய்யப்பட்டார்கள். கோபத்தில், கேத்தரின் குகையில் அடைக்கப்பட்டாள்! 12 நாட்கள் கழித்து குகையை திறந்தபோது ஒரு பெரிய வெளிச்சம் அந்த குகையிலிருந்து தோன்றியது. அதிசய நறுமணம் குகை வாசலில் மணந்தது! கேத்தரின் பிரகாசமான முகத்தோடு வெளியே வந்தாள்!

சிறந்த அறிவாளியான கேத்தரினை எப்படியும் தன் வழிக்கு கொண்டு வரவேண்டும் என விரும்பிய பேரரசன் ஓர் சிறந்த வாலிபனை அவளுக்கு மணம் முடித்துவைக்க அறிவித்தான். அதை மறுத்த கேத்தரின், என்னுடைய மணவாளன் இயேசுகிறிஸ்து! என் முழு கன்னி தன்மையையும் அவருக்கே நான் அர்ப்பணித்துவிட்டேன் என முழங்கினாள். கடுங்கோபங்கொண்ட பேரரசன், இரும்பு வண்டி சக்கரத்தை அவள் மீது ஏற்றி, அவள் உடம்பின் எலும்புகளையெல்லாம் நொறுக்கும்படி கட்டளையிட்டான். வண்டிசக்கரம் அவள் மீது ஏறியஉடன், இரும்பு வண்டி சக்கரம் தூள் தூளாக விழுந்து விட்டது. கோபத்தில் கண் சிவந்த பேரரசன் அவள் தலையை துண்டிக்க கட்டளையிட்டான். கொடு வாளோடு வந்த வீரர்களைப் பார்த்து தைரியமாய் "உங்கள் கட்டளையை நிறைவேற்றுங்கள்" என அவர்களை ஆணையிட்டு, இரத்த வெள்ளத்தில் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் உயிர் நீத்தாள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## 'பழத்தின் கொட்டை' அல்ல! உன் முழுவதும் கர்த்தருக்குத் தேவை!

திபேத் நாட்டின், ஜாம்காம் என்ற மலைச்சாரலில், ஒரு பெரிய மாமரம் துளிர்த்து நின்றது! அது ஒரு காட்டு மாமரம். வாழ்வில் முதன் முதலாவதாக நான் காட்டு மாமரத்தைக் கண்டது அன்றுதான். "அந்த மரங்களினால் மனிதருக்கு அதிக பிரயோஜனம் கிடையாது. கனி சதைப்பற்றைவிட மாங்கொட்டைதான் பெரிதாக இருக்கும்" என்று அங்குள்ள ஒரு மனிதர் என்னிடம் கூறினார். "இஸ்ரவேல் பலனற்ற திராட்ச செடி. அது தனக்குத்தானே கனி கொடுக்கிறது...." (ஓசியா.10:1) என்ற தேவ வசனம்தான் அப்பொழுது என் நினைவுக்கு ஓடோடி வந்தது.

தன் ஜீவ காலமெல்லாம், தன் சிருஷ்டிகருக்கென்று வாழாமல், தனக்காகவே பாவ வாழ்க்கை வாழும் எந்த ஒரு வாலிபனும், இந்த மாம்பழத்தைப்போலவே இருக்கிறான். அவன், தன் வாலிப பருவத்தை வீணாக்கிவிட்டு, தன் விருத்தாப்பிய தளர்ந்த காலத்தில், கர்த்தரைத் தேட முயற்சிப்பது "பழத்தை அல்ல" வெறும் கொட்டையை அவருக்குத் தருவதுபோல் அல்லவா? தன் இளமை வாலிப நாட்களிலேயே தன் சிருஷ்டிகரைத் தேடி வரும் எந்த வாலிபனும் பாக்கியவான்! நிறைவான ஜீவியத்தை அவன் கர்த்தருக்கு கொடுத்து பேரானந்தம் அடைவான்! நித்திய ஜீவனும் பெறுவான்!

'விலக்கப்பட்ட கனியின்' சுவையில் சிற்றின்பத்தை அள்ளிப்பருகும் வாலிபனே, உன் இளமை வீணாகுவதை காண்பாயாக! சிருஷ்டிகர் தரும் 'ஜீவ கனியன்றோ' உன் வாழ்வின் சிறப்பு! அதை அறிந்து, அவருக்கே உன் வாழ்வைத் தந்து பேரின்பம் காண்பாயாக!

*- சுவிசேஷ மலர்*

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.